# பொதுக்காலம் 22ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

மாட்சிமிகு கடவுளின் திருப்பெயரால் ஒன்றிணைந்து வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்போடு வாழ்த்தி, பொதுக் காலத்தின் இருபத்து இரண்டாம் ஞாயிறு இறைவழிப்பாட்டிற்கு இயேசுவின் திருநாமத்தில் பணிவோடு வரவேற்கின்றோம்.

நமது வாழ்வில் பணிவு, தாழ்ச்சி, தன்னடக்கம் ஆகிய மகத்தான செயல்களால் கடவுள் முன்பாக நாம் உயர்த்தப்படுவோம் என இன்றைய வாசகங்கள் வழியாக நாம் அறிந்து கொள்ள அழைப்பு விடுக்கப்படுகின்றது.

மனத்தாழ்ச்சியுடையோர் தனக்கு அடுத்திருப்பவர்கள் மீது குறிப்பாக ஏழைகள்மீது அக்கறை காட்ட முடியும். ஏழையரின் உள்ளத்தோருக்கு விண்ணரசை பரிசளிக்கின்ற இறைவன் கடவுளின் மறைபொருளை அவர்களுக்கு வெளிப்படுத்துகின்றார். அன்னை மரியாள் இதற்கு சிறந்த சாட்சியாக உள்ளார். இதோ இறைவனின் அடிமை நான் என்று தன்னை தாழ்த்தியவர் “இறைமகனின் தாய்” என உயர்த்தப்பட்டார். விண்ணக மண்ணக அரசியாக மணிமுடி சூட்டப்பட்டார்.

விட்டுக் கொடுப்பவர் வீழ்ந்தவரல்ல. தாழ்ச்சியுடன் வாழ்வோர் நிறைவாழ்வில் உயர்த்தப்படுகின்றார் என்பதை மனதில் பதிவு செய்து, தாழ்ச்சியை அல்ல, தாழ்வு மனப்பான்மையை ஒழித்துவிட்டு, நான் கனிவும், மனத்தாழ்ச்சியும் உள்ளவன் என்ற இயேசுவின் பொன்மொழிகளை வாழ்வாக்குவோம். இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### முதல் வாசக முன்னுரை (சீராக்கின் ஞானம் 3: 17-18, 20, 28-29)

இன்று சீராக்கின் ஞான நூலிலிருந்து வாசிக்க கேட்கவிருக்கின்றோம். நம் பணிவான செயல்கள் நம் உயர்வுக்கு வழிகாட்டுகின்றது. ஆற்றல் மிக்கவர் நம் இறைவன்; தாழ்ந்தோரால் மாட்சியடைகின்றார். எனவே பணிவோடும், மனத்தாழ்ச்சியோடும் வாழ வேண்டியதின் அவசியத்தை உணர்ந்து இறைவார்த்தைக்கு ஆவலோடு செவிமடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை (எபிரேயர் 12: 18-19, 22-24a)

முற்காலத்தில் இறைவாக்கினர்கள் வாயிலாக பேசிய இறைவன், அச்சம் விளைவிக்கும் காட்சிகளால் அஞ்சி நடுங்கிய மோசேயின் சீனாய் மலை அனுபவங்களில் இருந்து பல்லாயிரக்கணக்கான வானதூதர்கள் சூழ்ந்துள்ள கடவுள் வாழும் சீயோன் மலைக்கு வந்து சேர்ந்திருக்கும் நாம் இயேசுவின் திரு இரத்தத்தினால் தெளிக்கப்பட்டிருக்கின்றோம் என வலியுறுத்தும் எபிரேயருக்கு எழுதப்பட்ட மடலில் இருந்து வாசிக்கக் கேட்போம்.

## மன்றாட்டுக்கள்

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. கனிவும் மனத்தாழ்ச்சியும் உடையவரே எம் இறைவா!

உம் திரு அவையில் உள்ள அனைவரும் பணிவு, தாழ்ச்சி ஆகிய உயரிய பண்புகளை தங்கள் வாழ்வில் கடைப்பிடித்து உம் வார்த்தைகளுக்கேற்ப இறைமக்களை வழிநடத்திட வேண்டிய வரங்களை அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அமைதியின் அரசரே எம் இறைவா!

எம் நாட்டுத் தலைவர்கள் தங்களின் கடமைகளை நன்கு உணர்ந்து, சுயநலமின்றி அனைத்து மக்களையும் சமமாக நடத்தி, மக்கள் நலன்களுக்காக எடுக்கப்படும் திட்டங்கள் தகுதியானவர்களுக்கு சென்றடையவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நீடிய சாந்தமும் பொறுமையும் நிறைந்தவரே எம் இறைவா!

எமது இளைய சமுதாயம் தங்களது பிடிவாத குணத்தால் பல வேளைகளில் தடுமாற்றங்களை சந்திக்கின்றார்கள். அவர்களது மனத்தில் வேரூன்றியிருக்கும் கீழ்ப்படியாமை, இறுமாப்பு, பிடிவாதம் ஆகிய மருந்தில்லாத நோய்களில் இருந்து விடுபட்டு உம் வார்த்தைகளுக்கு ஏற்ப நுண்ணறிவாளர்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் ஊற்றே எம் இறைவா!

எமது பங்குப்பணியாளர் மற்றும் பணித்தள அருட்செல்வியர்கள், பொறுப்பாளர்கள், நம்பிக்கையாளர்கள் என அனைவரையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். சமாதான, சந்தோஷத்தை தந்து, உழைப்பாளர்களுக்கு உரிய ஊதியம் கிடைக்கப் பெற்று, பயிரிடுபவர்களுக்கு போதிய மழை தந்து மகிழ்வான இறைச்சமூகமாக வாழ்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. வழிநடத்தும் வள்ளலே எம் இறைவா!

எங்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை களைந்து, தேவையில் இருப்போரின் நலன்களில் அக்கறை கொண்டு, உம் ஆற்றலிலும், அருளிலும், ஆசிரிலும் நம்பிக்கை கொண்டு பணிவு, தாழ்ச்சி, அன்பு கொண்டு வாழ வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி: திருமதி. ஜெயின் வேலாயுதம், புளியரை, செங்கோட்டை மறைப்பணித்தளம்.**

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com